செ.வெ.எண் : 333 நாள் : 06.06.11

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், பதவியேற்ற அன்றே ஏழு முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் தற்போது செயல்படுத்தப்படும், ஐந்து திருமணத் திட்டங்களின் கீழ் பெண்களுக்கு திருமண நிதி உதவி தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் கீழ் வழங்கப்படும் 25,000 ரூபாய் நிதி உதவியோடு, மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 கேரட்) தங்கம் இலவசமாக வழங்கவும், இளம் பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக, இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்குவதோடு மணப் பெண்ணின் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 கேரட்) தங்கம் இலவசமாக வழங்கவும் தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தபடி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.5.2011 அன்று ஆணையிட்டார்கள்.

திருமண வயதை அடைந்த பெண்களைப் பெற்ற பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு திருமணம் செய்வதற்கும், அத்திருமணத்திற்கு தங்கம் வாங்கவும், போதிய நிதி வசதியின்றி சிரமப்படுவதையும் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏழை பெற்றோர்கள் மனம் குளிரும் வண்ணம் தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தபடி திருமண நிதி உதவியுடன் திருமாங்கல்யம் செய்ய தங்கம் வழங்கும் திட்டத்தை இன்று (6.6.2011) தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்து, ஏழு ஏழைப் பெண்களுக்கு 25.000/- ரூபாய் நிதி

உதவியுடன் திருமாங்கல்யம் செய்ய, நான்கு கிராம் (22 கேரட்) தங்க நாணயம் வழங்கி வாழ்த்தினார்கள். .

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இளம் பெண்கள் கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக, இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகை ஏற்கனவே வழங்கப்பட்ட ரூபாய் 25,000/-த்தை, 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டிருந்தார்கள். அதன்படி, இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டயம் பெற்ற ஏழு பெண்களுக்கு, திருமண நிதி உதவியாக ரூபாய் 50,000/-க்கான காசோலையுடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து திருமண நிதி உதவியுடன் திருமாங்கல்யம் செய்ய தங்கமும் பெற்றுக் கொண்ட பெண்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9

நாள்: 6.6.2011

2/2